# திருவருகைக்காலம் 4ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

‘அமைதி ஏற்படுத்தவே வந்தேன்’ என்றுரைத்த இறைமகனின் வருகையை எதிர்நோக்கியிருக்கும் அன்புள்ளங்களை இறை அமைதியில் நிலைத்திருக்க இத்திருவருகைக்கால 4ஆம் ஞாயிறு திருப்பலிக் கொண்டாட்டத்திற்கு அன்புடனே அழைக்கிறோம்.

அமைதியை உலகில் தேடித் தேடி அலைகிற மனிதர்கள் அமைதி தன்னுள் இருப்பதை உணராத வரையில் தேடல்கள் தொடர்ந்து கொண்டு தான் இருக்கும். கன்னியாய் இருந்தும் இறைமகனைப் பெற்றெடுப்பாய் என்று வாழ்த்தப்பட்டதும் எவ்வித சலனமும் சத்தமும் இன்றி, பொறுமையாய் இறை மைந்தனுக்கு அன்னையாக அமைதியுடனே ஆயத்தமானார் அன்னை மரியா. அத்தகைய அமைதி நம்முள்ளும், நம்மால் பிறருக்குள்ளும் தோன்றும்படி வாழ வரம் கேட்போம்.

“அவர் மேன்மை பொருந்தியவராய் இருப்பார்; அவரே அமைதியை அருள்வார்” என்று இஸ்ரயேல் மக்களை ஆளப்போகிறவரின் பிறப்பை மீக்கா நூல் எடுத்துரைக்கிறது. அவர் தம் மந்தையாகிய நம்மை மிகுந்த வல்லமையோடும் மாட்சியோடும் வழிநடத்துவார். இவ்வுலகில் அவரே அமைதியை அருள்வார். அவரின் வருகை இவ்வுலகின் மேடானது, கரடுமுரடானது என அனைத்து தவறுகளையும் தவிடு பொடியாக்கி இறை அமைதியையும் அவ்வமைதி தரும் மகிழ்ச்சியையும் மனங்களில் நிரப்பும்.

அன்னை மரியாவின் வாழ்த்துரை கருவிலிருந்த சிசுவையும் குதூகலத்தில் குதித்திடச் செய்தது. அவரின் வருகை எலிசபெத்திடத்தில் மகிழ்வை கொண்டு வந்தது. அத்தகைய வாழ்வின் நற்கனியை நாமும் பெற்றுக் கொள்வோம். நமது வார்த்தைகள் பிறருக்கு மகிழ்வைத் தர வேண்டும்.

“இனிய உளவாக இன்னாத கூறல்

கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.”

என்கிறார் வள்ளுவர். பழங்கள் இருக்கையில் காய் உண்போமா? அதுபோல இனிய வார்த்தைகள் இருக்க, தேவையற்ற வார்த்தைகளைக் கூறக் கூடாது என்பது இதன் பொருள்.

இயேசுவைப் போல பலியை அல்ல; இரக்கத்தையே விரும்புகிறேன் என்ற சிந்தனைகளை நாமும் செயல்களாக்குவோம்.

அன்னை மரியின் வார்த்தைகள் எவ்வாறு மகிழ்வைத் தந்ததோ, அது போல நம்மைச் சந்திப்பவர்களுக்கு நல்லதை செய்து சந்தோஷத்தை பெருக்குவோம். இச்சிந்தனைகளை மனதில் தாங்கி அன்னை மரியாவைப் போல அமைதியோடு ஆண்டவரின் வருகைக்காகக் காத்திருப்போம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

*பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

1. அமைதியின் வடிவே எம் இறைவா!

இவ்வுலகில் அமைதியை ஏற்படுத்த வந்தவரே, எம் திரு அவையை நீர் விரும்பும் அமைதிப் பாதையில் வழிநடத்தும் திருச்சபைப் பணியாளர்கள் நற்செய்திப் பணியோடு தாங்கள் பணி செய்யும் பகுதிகளில் அமைதி ஏற்படுத்தும் கருவியாய் செயல்பட வல்லமை வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. இறைத் திருவுளத்தை நிறைவேற்றியவரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் தலைவர்கள், அதிகாரிகள், மக்களின் உளம் விரும்பும் செயல்களை செய்யவும், கலகங்களை ஏற்படுத்தி அமைதியைக் குலைக்காமல், பாகுபாடின்றி அனைத்து மக்களையும் ஒரே குடையின் கீழ் நடத்தி நல்வாழ்வை ஏற்படுத்த ஞானம் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அமைதியை அருள்பவரே எம் இறைவா!

உலக நாடுகளில் உள் நாட்டிலும், பிற நாடுகளுடனும் ஏற்பட்டுள்ள சமாதானமற்ற சூழல் தீர்க்கப்பட்டு, மகிழ்ச்சி, சமாதானம் ஏற்பட்டு அனைத்து நாடுகளும் அன்புறவில் பிணைக்கப்பட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. மகிழ்வின் செய்தியைத் தருபவரே எம் இறைவா!

உமது பிறப்பினை எதிர்நோக்கியிருக்கும் நாங்கள், எங்கள் இல்லத்திலும், உள்ளத்திலும் உள்ள தீய எண்ணங்களை விடுத்து, மகிழ்வைப் பெற்றுக் கொள்ளும் வரம் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

5. நம்பிக்கையினைத் தருபவரே எம் இறைவா!

எம் பகுதியில் போதிய மழை பொழிந்து விவசாயம் சிறக்கவும், குடும்பங்களில் அமைதி, சந்தோஷம் பெருகவும், படிக்கும் மாணவர்கள் ஞானத்தில் நிறைந்திருக்கவும், வேலைவாய்ப்பு திருமணம், குழந்தை வரம் வேண்டுவோர் உமதருளால் பெற்றுக் கொள்ளும் வரம் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: ஆசிரியை. திருமதி. ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com